88 A/L
WEEKEND CLASSES
BOTANY
ஆசிரியர் : திரு குகாதரன்
சூழலியல்
ஆரம்பம் : 02-04-88
Saturday 1-30 p.m-2.30P m
பிறப்புரிமையியல்
ஆரம்பம்: 01-04-88
Fri 10 30 a m 12 30 P m
New Master Institute
241, Navalar Road,
Jaffna.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

88 A/L
PaperClass
(Sat & Sun)
9. 30 – Botany
10. 30 – Zoology
11. 30 – Chemistry
12 30 – Physics
நடைபெறுகின்றன.
New Master
INSTITUTE
241, Navalar Road Jaffna

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு பங்குனி மீ 19 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 13 (01-04-1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:43

● 17 பேர் பலி; 6 பேர் காயம்; 100 வீடுகள் தீக்கிரை

# கல்முனையில் பெரும் கலவரம்!

# தீயில் வெந்து பலர் மரணம்!!

## காலவரையறை இல்லாத ஊரடங்கு முஸ்லிம் கிராமங்கள் பாதிப்பு

கொழும்பு, ஏப்ரல் 1

கல்முனைப் பிரதேசத்தில் நேற்றுப் பெரும் கலவரம் ஏற்பட்டது. முஸ்லிம் மக்கள் வாழும் இரண்டு கிராமங்களுக்குள் புகுந்த ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று பெரும் அனாத்தங்களை விளைவித்தது.

மல்லிக்காடு, சாய்ந்தமருது ஆகிய அந்த இரண்டு கிராமங்களுக்கும் தீ வைக்கப்பட்டது. துப்பாக்கிப்பிரயோகமும் செய்யப்பட்டது.

முற்கொண்டு கிடைத்த செய்திகளின் பிரகாரம் 17 பேர் மரணமானார்கள் என்றும் 6 பேர் காயமடைந்தார்கள் என்றும் அறியவந்தது. ஆனால் இறந்தோரின் எண்ணிக்கை அதிகம் என்றும் அவர்களில் பலர் தீயில் வெந்து பலியானார்கள் என்றும் பின்னர்கிடைத்த ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

நேற்றைய தாக்குதல்– கலவரச் சம்பவங்களைத் தொடர்ந்து கல்முனைப் பிரதேசம் எங்கணும் காலவரையில்லாத ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

இக் கலவரம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கல்முனைப் பகுதியில் உள்ள மல்லிக்காடு, சாய்ந்தமருது ஆகிய கிராமங்களே நேற்று ஆயுதந் தரித்த கோஷ்டி ஒன்றின் தாக்குதலுக்கு இலக்கா கின.

அதிகாலை வேளையில் பிரஸ்தாப கிராமங்களுக்குள் புகுந்த அந்தக் கோஷ்டி பரவலாக வீடுகளுக்குத் தீ வைத்தது. சுமார் இரண்டு மணி நேரமாகத் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தது.

இரண்டு கிராமங்களிலும் 75 முதல் 100 வீடுகள் வரை தீக்கிரையாகின.

உயிரிழந்தோரில் பெரும்பாலானோரும் தீக்குப் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீடுகள் எரிக்கப்பட்டன; உடைமைகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ★ அந்தக் கூட்டங்களுக்குத் தடை வரும்

கொழும்பு, ஏப்ரல் 1

மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கக் கூடாது என்று மக்களைக் கேட்டுக்கொள்வதற்காக நடத்தப்படும் பொதுக் கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்படும்.

அக்கூட்டங்களை நடத்தப் பொலீஸார் அனுமதி அளிக்கமாட்டார்கள்.

அமைச்சரவை மேற்கண்டவாறு முடிவுசெய்திருக்கின்றது.

தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்று மக்களைக் கோருவது ஜனநாயக விரோதச் செயல். அமைதியின்மைக்கே அது வழிவகுக்கும் என்றும் அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிடப்பட்டது. [ஒ-எ]

### சுபநேரம்

1 - 4 - 1988
பங்குனி 19
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6.11 முதல் 7.41வரை
ராகுகாலம்:
10 41 முதல் 12.11வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
பங்குனி உத்தரம்.
பெரிய வெள்ளி.

கிளிநொச்சி குண்டு வெடிப்பு:

## மரணமான இளைஞர் அடையாளம் காணப்பட்டார்

கிளிநொச்சி, ஏப் 1

கடந்த 27 ஆம் திகதி மாலை கிளிநொச்சி 155 ஆம்கட்டையடியில்இடம் பெற்ற குண்டு வெடிப்பின்போது மரணமானவர் அடையாளம்காணப் பட்டார்.

இக்குண்டு வெடிப்பில் இறந்தவர் கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த மாரிமுத்துசுரேந்திரன் (23 வயது) என்பவராவார். மரணமானவரின் சடலத்தைஅவரது தாயார் மாரிமுத்து செல்லம்மாஅடையாளம் காட்டினார்.

மரணமானவர் அங்காடி வியாபாரம் செய்பவர் எனவும், சம்பவ தினம் அங்காடி வியாபாரத்தை முடித்துவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையிலேயே குண்டு வெடிப்பு சம்பவத்தில் அகப்பட்டு மரணமானதாகவும் இறந்தவரது தாயார் மரண விசாரணையின் போது தெரிவித்தார்.

இறந்தவரது சடலத்தை கிளிநொச்சி பொலீஸார் மீட்டெடுத்து கிளிநொச்சி வைத்திய சாலை பிரேத அறையில் சேர்த்தனர். மரண விசாரணையின் பின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக அயலவர்கள் சுமார் 25 பேர் இந்திய அமைதிப் படையினரால் விசாரணைக்காகமுகாமில்தடுத்து வைக்கப்பட்டனர். [ஒ 76]

## அமைதிப் படையின் போக்குவரத்துக்கு ஸ்ரீலங்கா நிபந்தனைகள்!

கொழும்பு, ஏப் 1

வடக்கில் இருந்து கிழக்குக்கும் கிழக்கில் இருந்து வடக்குக்கும் இந்திய அமைதிப் படையினர் போக்குவரத்துச் செய்வதற்கு ஸ்ரீலங்கா அரசு சில நிபந்தனைகளை விதித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி முன்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டியில் நடந்த கூட்டம் ஒன்றில் அமைச்சர் பேசினார். அப்போது அவர் சொன்னதாவது:-

மின்னேரியா போன்ற சிங்களப் பகுதி ஊடாக இந்திய அமைதிப் படை செல்லநேரிடின் இலங்கை இராணுவம் அவர்களுடன் கூடச் செல்லும்.

அடுத்தது நாம் சொல்லும் நோக்கில் அவர்கள் அப்படி போகலாம்; வரலாம்

அண்மையில் மின்னே

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஓய்வூதியம் விரைவில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப் 1

மார்ச் மாத ஓய்வூதிய கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படும்

இதற்கான நடவடிக்கைகளை யாழ் செயலக ஓய்வூதியத் திணைக்களத் தவர் துரித கதியில் மேற்கொண்டு வருகின்றனர்

எனினும் ஓய்வூதியக்காரர்கள் எவரும் யாழ் செயலகத்துக்கு வரத் தேவையில்லை என்றும்–

சகலருக்குமான ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்கள் தபால்மூலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-க-9-10)

முச்சந்தி முரளி



கார் லைசென்ஸ் பற்றிக் கவனம் என்பது ஒரு புறம் இருக்கட்டும்...

இன்றைக்கு உங்களை முட்டாளாக்கப் பல பேர் திட்டம் போட்டிருப்பினம் கவனம்!

ஏப்ரல் முட்டாள் தினம் எல்லே இன்றைக்கு......!

### விமானம் சிதறியது

நைஜீரிய சரக்கு விமானம் ஒன்றுசெய்ரோ சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் நேற்று விழுந்து நொருங்கியதில் நான்கு விமான சிப்பந்திகளும் உயிரிழந்தனர். (ஒ-எ)

இரண்டு வாரங்களுக்குள்

## 2,540 தமிழ் அகதிகள் நாடு திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப் 1

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் 2,540 பேர் அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்குள் இங்கு வந்து சேருவர்.

இவர்களை நான்கு கப்பல்கள் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

இதன்படி எதிர்வரும் ஐந்தாம் திகதி செவ்வாய்க்கிழமை முதலாவது அகதிகள் கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்தடையும்.

இரண்டாவது கப்பல் ஆறும் திகதி புதன்கிழமை இங்கு வந்து சேரும். இங்கு வந்துசேரும் அகதிகளை வரவேற்றுப் பராமரிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கைத் தமிழ் அகதிகள் வரும் மூன்றாவது, நான்காவது கப்பல்கள் இம்மாதம் பதினொராம், பன்னிரண்டாம் திகதிகளில் காங்கேசன் துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் இந்த இரு அகதிகள் கப்பல்களும் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களுக்கு ஓரிருதினங்கள் முன்னதாகவோ அல்லது பிந்தியோ இங்கு வரலாம் எனவும் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-க)

[மறுசெய்தி 5ஆம் பக்கத்தில்]

மலையகத் தமிழருக்கு குடியுரிமை:

## ஸ்ரீலங்கா அரசின் போக்கை கண்டிக்கிறார் தொண்டமான்!

சென்னை, ஏப் 1

இந்தியா திரும்ப அழைத்துக் கொள்ளும் மலையகத் தமிழரின் எண்ணிக்கைக்கு ஏற்ப வே, எஞ்சியோருக்குக் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற கொள்கையை ஸ்ரீலங்கா கடைப்பிடிக்கக்கூடாது.

—இப்படி அமைச்சர் தொண்டமான் சென்னையில் தெரிவித்தார்.

குடியுரிமை பெறாமல் இருக்கும் மலையகத் தமிழரின் பிரச்சனைகளைத் தீர்க்க இந்திய ஸ்ரீலங்கா அரசுகள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

1964ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி, ஸ்ரீலங்கா அரசு 4 லட்சத்து 69 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்கியிருக்கவேண்டும்.

ஆனால் இன்றுவரை 2 லட்சத்து 23 ஆயிரம் பேருக்கே இலங்கைக் குடியுரிமைவழங்கப்பட்டு உள்ளது.

இன்னும் இரண்டரை லட்சம் பேருக்கு குடியுரிமை வழங்கப்படாமல உள்ளது.

இதைவிட இன்னும் ஒன்றரை லட்சம் பேருக்கு இலங்கைக் குடியுரிமை இல்லாமலும் இந்திய குடியுரிமை இல்லாமலும் தவிக்கின்றார்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் இலங்கைக் குடியுரிமை பெறுவதையே விரும்புகின்றனர்.

இது விஷயத்தில் அவர்கள்மீது எவரும் நிர்ப்பந்தம் பிரயோகிக்கக் கூடாது.

இந்தியா திரும்பும் மலையகத் தமிழரின் எண்ணிக்கைக்கு ஏற்ப எஞ்சியிருக்கும் தமிழருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையை ஸ்ரீலங்கா அரசு கடைப்பிடிக்கக்கூடாது.

இப்படி அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார். [அ-எ]

உள்நாட்டு வெளிநாட்டு

## அரிசி விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம் ஏப் 1

உள்நாட்டு வெளிநாட்டு அரிசியின் விலைகள் பார்ச் மாதம் 14ஆம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன

இதன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கிலோ ஏழு ரூபாவாக விற்பனை செய்யப்படும். இதன் முன்னைய விலை கிலோ 6 ரூபா 60 சதமாகும்

உள்நாட்டு அரிசி கிலோ 8 ரூபா 75 சதமாக விற்பனை செய்யப்படும்.

இதன் முன்னைய விலை 7 ரூபா 55 சதம் ஆகும்.

விலை அதிகரிப்பு சம்பந்தமான அறிவுறுத்தல் யாழ். அரச அதிபருக்கு கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ-9-10)

### மாக் கப்பல்

950 தொன் மாவுடன் கப்பல் ஒன்று இன்று காங்கேசன் துறைமுகத்துக்கு வருகிறது.(ஒ-10)

### பாடசாலை விடுமுறை

அரசாங்கப் பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக நேற்றுடன் மூடப்பட்டன

எனினும் தனியார்பாடசாலைகளின் முதலாம் தவணைக் காலம் இன்னமும் முடிவடையவில்லை.

மூடப்பட்ட அரசாங்கப் பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக மே மாதம் 2 ஆம்திகதி மீண்டும் திறக்கப்படும். (ஒ-க)

சாரதிகளே ஏமாறுதீர்கள்:

## போலிச்சாரதி லைசென்ஸ் புழக்கத்தில்! கவனம்!!

வடபகுதியில் தயாரிக்கப்படும் போலிச் சாரதி "லைசென்ஸ்"கள் தற்பொழுது புழக்கத்துக்கு வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த அசம்பாவிதங்களின் போது 'லைசென்ஸ்' புத்தகங்கள் காணாமல் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஐநூறுக்கு மேற்பட்ட லைசென்ஸ் புத்தகங்கள் காணாமல்போய் உள்ளதாக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்

இந்தப் புத்தகங்களில் இருந்து லைசென்ஸ் தயாரித்து 2,500 ரூபாவிற்கு மேல் விற்கப்படுவதாகவும்—

இப்படியான போலி 'லைசென்ஸ்' வைத்திருந்த ஒருவரை கொழும்பில் பொலீஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## வாசகர் கவனத்துக்கு

நேற்று இரவு யாழ்ப்பாண நகரில் திடீரென ஏற்பட்ட மின்சாரத் தடை காரணமாக இன்றைய உதயனை உரிய நேரத்தில் அச்சிட முடியாமற் போயிற்று என்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

தாமதம் குறித்து வாசகர்கள் மன்னிப்பார்களாக.

கிளிநொச்சி

## பிரசைகள் குழு தலைவர் கைதாகி விடுவிப்பு

கிளிநொச்சி பிரசைகள் குழுத் தலைவர் இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்

கிளிநொச்சி பிரசைகள் குழுவின் தலைவர் திரு எஸ், சிவராசலிங்கம் கடந்த 28 ஆம் திகதி மாலை 7 மணிக்கு கைது செய்யப்பட்டு மாலை 7 மணிக்கு விடுவிக்கப்பட்டார்.

கடந்த 28 ஆம் திகதி முதல் கிளிநொச்சியில் நடைபெற்ற ஹர்த்தால் சம்பந்தமாகவும் 27 ஆம் திகதி 155 ஆம்கட்டை என்னுமிடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பந்தமாகவும் பிரசைகள் குழுத்தலைவர் கைது செய்யப்பட்டார் எனச் சொல்லப்படுகிறது. (ஒ 76)

### ● இப்படியும் ஓர் எச்சரிக்கை

புத்தாண்டை ஒட்டி ஜே வி பியினர் வன்செயல்களில் ஈடுபடத் திட்டமிட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்று எச்சரிக்கை ஒன்றைக் கொழும்பில் விடுத்தது. (ஒ-எ)

### தென்மராட்சியில்

தென்மராட்சிப் பகுதியில் கடந்த புதன்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலைகள் நடைபெறவில்லை, வர்த்தக நிறுவனங்கள், தொழில் நிலையங்கள், இறக்கப்படவில்லை. சந்தை கூடவில்லை போக்குவரத்தும் பெருமளவில் ஸ்தம்பிதம் அடைந்தது. (ஒ 31)

இளைய கலைமுறையின் இதயமாகவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Uplands Farm Ltd கோழிக் குஞ்சுகள், 06-04-88 புதன்கிழமை இரண்டுமாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக்கூடிய (Lohmann) சேவல் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். விலை ரூ 4 00 முன் கூட்டியே பதிவுசெய்க No.9 குராவத்தை ரோட், கந்தையா லேன், சுன்னாகம். ஸ்டேசனுக்கு அருகாமையில், (2708)

நல்ல நிலையிலுள்ள சோமசெற் கார் விற்பனைக்கு உண்டு. S. X. அருள்நாயகம், பண்டியதாழ்வு பேக்சரி, பண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (2278)

பரந்தன் 3 ஆம் வாய்க்காலில் இருபோகமும் செய்கை பண்ணக்கூடிய 6 ½ ஏக்கர் நெல் வயல் உடன் விற்பனைக்கு உண்டு: தொடர்பு: கொள்ளவும், பொ. நடராத்தினராசா 18, 1 ஆம் ஒழுங்கை, ஊரெழு கிழக்கு, சுன்னாகம். [2253]

மூன்று லாச்சியுடன் மேசை, தேனீர்மேசை (ரீப்பட்டடை) குளிர் சாதனப் பெட்டி, ஷோக் கேஸ், பலசரக்குப் பட்டடை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. நல்லநாதன் 195, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். [2280]

### புத்தகம்

விபவ வருஷ பலன்கள் வெளியாகியுள்ளன. முற்றிலும் புதிய அம்சங்களுடன் மினி பஞ்சாங்கத்துடன் புத்தாண்டு தினத்தில் நாள் முழுவதும் படிப்பதற்கு பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (2272)

### சேவை

யாழ்நகரில் இயங்கிவரும் சமூகசேவை நிறுவனத்தில் மேற்பார்வையாளராக தங்கி கடமை புரிய சமூகசேவையில் நாட்டமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். ஓய்வுபெற்ற ஆசிரியர் முழுநேரம் பணியாற்றக் கூடிய ஆரோக்கியம் உள்ளவர் விரும்பத்தக்கது. தொடர்பிற்கு, C/O உதயன் விளம்பர இல.120யாழ்ப்பாணம். [2282]

யாழ். சைனீஸ் றெஸ்ரோறன்ஸ் முதலாம் குறுக்குத்தெரு, தற்போதைய (R. R. நல்லையா வீதி), இரவு 7.30 வரை திறந்திருக்கும். இந்த சைனீஸ் றெஸ்ரோறன்ஸுக்கு வேறு கிளைகள் இல்லை. இதுவே வடக்கில் முதலில் உருவாகி முதன்மையாகத் திகழ்கிறது (2241)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும். Fudo Enterprises, 39 / 17, 3rd Lane, Power House Road, Jaffna. (Near Samy & Co.) (1803)

### TRAINNING

Computer Trainees பலர் உடன் தேவையாதலால், ஏற்கனவே 'Basic' Programming பயின்றவர்களுக்கு குறுகிய கால சிறப்புப் பயிற்சி I B M Computerகளிலும் 450 ரூபா கட்டணத்தில், 4-4-1988 (2-30 p.m.) இற்கு ஆரம்பமாகின்றது தொடர்புகளுக்கு:- IDP Jlippalai.

### வாடகை

வீடு வாடகைக்கு தொடர்பு கொள்ளவும் "நெஸ்கோ" காரைநகர் வீதி சித்தங்கேணி. (2256)

### தேவை

யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்திலிருந்து ½ கிலோ மீற்றர் தொலைவினுள், குறைந்தது 4 அறைகளுடன் கூடிய வீடு ஒன்று கணக்காளர் முகாமைத்துவக் கம்பனி ஒன்றுக்கு தேவை. Business Promoters (pvt) LTD 198, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

விற்பனைப் பிரதிநிதி தேவை. பயிற்சியும் ஆங்கில அறிவும் உடையவர்கள் விண்ணப்பிக்கவும் விளம்பர இல 119 C/o உதயன் யாழ்ப்பாணம். (2277)

### பங்காளர் தேவை

நல்ல நிலையில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு ரூ. 30,000/- முதலிடக்கூடிய பங்காளர் தேவை. கிறிஸ்தவராயின் விரும்பப்படுவர். ஒரு வாரத்துக்குள் விண்ணப்பிக்கவும். விள. இல 118 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [2236]

### வகுப்புகள்

Radio, T.V, air Conditioning Refrge Ration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வைண்டிங், Spoken English, Typing சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vis pa Engineering Aid Hall. 326 நாவலர் வீதி. ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம். [2217]

O/Lக்கு உட்பட அனைத்து வகுப்புக்களுக்கும் கணிதம், விஞ்ஞானம் கற்பிக்க விருப்பும் பகுதிநேர ஆசிரியர்கள் தேவை. மிகக்குறைந்த மாதாந்த சம்பளம் ரூபா 400/- தகுதி, சம்பளம் குறிப்பிட்டு கை எழுத்து விண்ணப்பத்துடன் 5 ஆம்திகதிக்கு முன் முற்பகல வேளையில் சந்திக்க அதிபர், மதி அக்கடமி ஊரெழு [2271]

G. C. E. A/L 89ஆம் ஆண்டுக்கான கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன, 6, 7, 8, 9, 10ஆம் வகுப்புகளுக்கான ஆங்கில வகுப்புகளும் மற்றும் விசேட ஆங்கில வகுப்புகளும் ஆரம்பம் 1-4 88 விபரங்களுக்கு சென் மேரிஸ் இன்ஸ்ரிரியூட், மனோகரா சந்தி, 153, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2718)

### பாலர் கல்விப்போட்டி

பாலர் கல்விக் கழகத்தின் (தமிழ், ஆங்கிலம்) பேச்சு அபிநயம் பாட்டுப் போட்டிகள் மே மாத இறுதியில் நடைபெறவுள்ளது. போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாலர் பாடசாலைகளும் முகவரியிட்ட 75 சத முத்திரை ஒட்டிய கவருடன் விண்ணப்பிக்கவும் செயலாளர்; பாலர் கல்விக் கழகம் 84, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (2719)

### வேலைவாய்ப்பு

3 மாத விசாவுடன் அவுஸ்திரேலியா, கனடாவிற்கும் Greece நாட்டில் Hotelலில் பெண்களுக்கும் குவைற்றில் இருபாலாருக்கும் பாஸ்போட் படங்களுடன் நேரில் வந்தால் உடனடி வேலைவாய்ப்பு உண்டு. பாஸ்போட் செய்து கொடுக்கப்படும். சந்திக்கும் நேரம் சனி, ஞாயிறு காலை 9மணிமுதல மாலை 5 மணிவரை. தொடர்பு: Mrs P. Danial 'Sivasthan' Mallakam 2269

---

வாடிக்கையாளர்களே !
வியாபாரிகளே !

1. நல்ல விலையில் கொப்பரு கொள்வனவு செய்யப்படும்.
2. நன்றாகக் காய்ந்த தேங்காய்ப்பால் எடுத்த 'பூ'வையும் சேகரித்துப் பணமாக்குங்கள்.
3. கைவசமுள்ள 'கொப்பறு', 'பூ' ஆகியவற்றை உடன் கொடுத்து அதன் பெறுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
4. No-1 தேங்காய் எண்ணெய்க்கு விஜயம் செய்யுங்கள்.
5. குறைந்த செலவில் எண்ணெய் வடித்துக் பெற்றுக் கொள்ள வேண்டுமா?

உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**மல்ரி - ஒயில்**
**இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்**
**OIL MILLERS**
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
[இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்புறம்]

---

## 6மாத நினைவஞ்சலி



தோற்றம் : 12-10 1939
மறைவு : 1 11-1987

### அமரர் வ. தம்பிராசா

(கட்டிட ஒப்பந்தகாரரும், பிரங்போட் எலக்றிக்கல் உரிமையாளரும்)

எமது அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இறைவனடி சென்று அரை ஆண்டு சென்றாலும் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

அன்பு மனைவி, செல்லம்மா
மகன், சுந்தரலிங்கம்
மருமகள் சறோமலர்
பேத்திமார் கிருஷ்ந்தினி, தர்ஷினி

144 இராமநாதன் றோட்,
யாழ்ப்பாணம்.

---

## Colombo -- Jaffna -- Colombo

### Air Cargo & Air Mail Courier Service

Mack Communications &Travels, Jaffna offers a charter air cargo service from JAFFNA TO COLOMBO AND BACK on Cessna 206 Stationair aircraft UPALI to be used by Cargo consolidators, Distribution Agencies, Trading firms etc.,

Mack Communication & Travels, Jaffna is also operating an airmail courier service from JAFFNA TO COLOMBO and back & also we under take all types of small parcels and letters to be delivered in Colombo.

For details, Please enquire:

**MACK**
**Communications & Travels**
No. 8, 1st Lane,
Point-Pedro Road, Jaffna.

In Colombo contact:

**UPALI TRAVELS LIMITED,**
[GSA for Upali Aviation (Pte) Limited]
34, Galle Road, Colombo-3.
Tel: 20465, 29399, 28826

---

## 11ஆம் மாத நினைவஞ்சலி

அமரர் நாகமணி சிவஞானம்

மலர்வு: 30 - 5 - 1944
மறைவு: 12 - 5 - 1987

அருந்துயரில் எமை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட மகனே உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்!

இங்ஙனம்
துயருறும் அப்பு,
அம்மா மனைவி'
மகன் சகோதரர்கள்,
மைத்துனர்

பூந்தோட்டம்,
தெல்லிப்பழை கிழக்கு.

[ 2286 ]

---

### சொந்தமாக்க நடவடிக்கை

கிளிநொச்சி, ஏட்ரல் 1 விவசாயத் திணைக்களத்தினால் விவசாயப் போதனாசிரியர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை சொந்தமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது (இ-76)

---

## பதவி வெற்றிடம்

சங்கத்தில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன கீழ்க்குறிப்பிடும் விபரங்களுக்கமைய விரும்புவோர் 20-04 88 புதன்கிழமைக்குப் பிந்தாது தமது விண்ணப்பத்தினை பதிவுத்தபால் மூலம் ' தலைவர், பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு ' என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

### 1) பொது முகாமையாளர்

| | | |
|---|---|---|
| சம்பளத் திட்டம் | — | ரூபா 800 - 1250 / 40/5 - 50/5 [ சங்கத்தால் வழங்கப்படும் அரசாங்க விசேட உரிய படிகளும் ] |
| உறொக்கப்பிணை | — | ரூபா 4000 / 00 |
| ஆதனப்பிணை | — | ரூபா 10000 / 00 |
| வயது | — | 23 - 50 |
| தகைமை | — | கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சுற்றுநிருபம் இல. 108/81ன் சம்பள இல. 101/6ஐ பார்வையிடவும் |

### 2) கணக்காளர்:

| | | |
|---|---|---|
| சம்பளத் திட்டம் | — | ரூபா 500 - 840 / 20/5 - 30/8 [ சங்கத்தால் வழங்கப்படும் அரசாங்க விசேட உரிய படிகளும்) |
| உறொக்கப்பிணை | — | ரூபா 2500 / 00 |
| ஆதனப்பிணை | — | ரூபா 5000 / 00 |
| வயது | — | 23 — 40 |
| தகைமை | — | கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சுற்று நிருபம் இல. 108/81ன் சம்பள இல. 104 / 8ஐ பார்வையிடவும். |

தலைவர்,
பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ. கூ. சங்கம்.

---

## றெமிங்ரன் கல்வி நிலையம்

மூளாய்

### தமிழ் மொழிப் பரீட்சை

**ஆண்டு 8**
ஜெகதீஸ்வரி-நவரட்ணம் — 1 ஆம் பரிசு
சௌம்யா - குலசேகரம் — 2 ஆம் பரிசு
துளசினி-செல்லத்துரை — 2 ஆம் பரிசு
தாரணி-முத்துக்குமாரசூரியர்-3 ஆம் பரிசு

**ஆண்டு 7**
சுபதாயினி-சிவானந்தன் — 1 ஆம் பரிசு
கிருஸ்ணபவானி-ஆறுமுகம் — 2 ஆம் பரிசு
வரதராஜா-மதிமாறன் — 3 ஆ பரிசு

**ஆண்டு 6**
சண்முகநாதன்-அரவிந்தன் — 1 ஆம் பரிசு
வதனு-ஜெயானந்தசாமா — 2 ஆம் பரிசு
கவிதா-சந்தசாமி — 3 ஆம் பரிசு

**ஆண்டு 5**
ஜெயந்தி-தேவராசா — 1 ஆம் பரிசு
தரிசினி-சிவஞானம் — 2 ஆம் பரிசு
விஜயமலர்-கோவிந்தர் — 3 ஆம் பரிசு
பூரணசந்திரன்-ஜெயப்பிரகாஸ்-3 ஆம்பரிசு

ஆண்டு 9, 10, O/L A/L பெறுபேறுகள் பின்னர் அறிவிக்கப்படும்

[2238]

K. மனோ.
நிர்வாகி

---

## Diploma in Home Economics Classes

- ★ Cake Icing
- ★ Cookery
- ★ Dress-Making
- ★ Flower-Making
- ★ Handi - Craft
- ★ Hair-Styling
- ★ Glass& Fabric-Painting &Kolam

★ இத்துடன் G C.E (A/L) 88 August மனைப்பொருளியல் பரீட்சைக்கான வினா-விடை வகுப்புக்களும், G. C. E. (A/L) 89. 90 Aug. மனைப்பொருளியல் பரீட்சைக்கான காலை - மாலை வகுப்புக்களும் நடைபெறும்.

★ தொழில் புரியும் பெண்களின் வசதிக்காக ஞாயிறு வகுப்புக்களும்நடைபெறும்.

விபரங்களுக்கு:-

**LADIES' ACADEMY**
(Regd. No 15918)
VICTORIA ROAD,
JAFFNA.

புதிய வகுப்புக்கள் 4 - 4 - 88 அன்று ஆரம்பமாகின்றன.

(2270)

---

## கம்பியூட்டர் கல்வி



### Computer Programming in Basic Language

★ வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் பயிற்சி.

★ பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கான பிரத்தியேக கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் ஆகின்றன.

ஆரம்பம் : 6-4-1988  பயிற்சிக் காலம் : 40 நாள்

கட்டணம் : ரூபா 750/- மாத்திரம் இருபிரிவுகளாகச் செலுத்தலாம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி நவீன கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

● குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள்; ஆதலால் நேரில் வந்து விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும். விண்ணப்ப முடிவு நாள் : 5-4-88

**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசு பிரபாகரனை அழைத்துப் பேச வேண்டும்

## இலங்கைப் பிரச்சினையில் போராட்டம் நடத்தி மலிவு விளம்பரம் தேட முயலமாட்டோம்

### ஜெயலலிதா பேட்டி

— சென்னையிலிருந்து எமது சிறப்புப் பிரதிநிதி ந. வித்தியாதரன் —

சென்னை, மார்ச். 31

பிரபாகரனை அழைத்து இந்திய அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்.

சென்னையில் இம் மாதம் இருபதாம் திகதி பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்த போது ஜெயலலிதா மேற்கண்டவாறு கூறினார்.

கேள்விகளும் பதில்களும் வருமாறு:-

கே: இலங்கை பிரச்சினையில் உங்கள் நிலை என்ன?

ப: புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சியில் இருந்த கொள்கை தான் எங்கள் கொள்கையும்.

இலங்கையில் இருக்கும் இந்திய அமைதிப் படையை வாபஸ் பெற வேண்டும். அங்கு போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். பிரபாகரனை அழைத்துப் பேச வேண்டும் என்பது தான் எங்கள் கொள்கை.

இதுபற்றி நான் நேற்று இரவு பிரதமர் ராஜீவ் காந்தியுடன் டெலிபோனில் தொடர்பு கொண்டு பேச முயற்சி செய்தேன்.

ஆனால் ராஜீவ் காந்தி உறங்கிவிட்டதாக அவரது உதவியாளர் தெரிவித்தார்.

இப்போது இருக்கும் நிலையில் பிரபாகரன் மீது கைவைத்தால் விபரீத விளைவுகளை மத்திய அரசு சந்திக்க நேரிடும்.

**தங்கராஜ் புகார்**

கே: நாடாளுமன்றத்தில் தங்கராஜ் ரூ. 5 லட்சத்தைக் கொட்டி உங்கள் மீது புகார் கூறியிருக்கிறாரே?

ப: அது அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டு. நாடாளுமன்றத்துக்குள் எந்தப் பொருளையும் கொண்டு போகக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. எனவே பணத்தைக் கொண்டு வந்து கொட்டிய தங்கராஜ் மீது சபாநாயகர் நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும்.

**கொலை முயற்சி**

எதிர் அணியினரிடம் கோடி கோடியாகப் பணம் உள்ளது. அவர்கள் அந்தப் பணத்தைக் காட்டி ஒருவரைக் கொலை செய்வதற்காக இந்தப் பணத்தை கொடுத்தார்கள் என்று அவர்கள் சொன்னால் அதை நம்புவீர்களா?

சட்ட சபையில் ஜெப்பியார் வன்முறை செயல்கள் விரும்புகிறார்கள்.

இது தொடர்பாக ராஜீவ் காந்திக்கு தந்திகள் கொடுத்து முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

**வேட்பு மனுக்கள்**

தேர்தலில் போட்டியிட விரும்புகின்றவர்களிடம் இருந்து வேட்பு மனுக்கள் பெறுவதற்காக ஆய்வுக்குழு அமைக்கப்பட்டது.

மொத்தம் உள்ள 234 தொகுதிகளிலும் 3307 பேர் மனுக்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஒரு மனு தாக்கல் செய்ய ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 33 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் வசூல் ஆகி உள்ளது.

**வரலாறு காணாதது**

இது போல் சட்ட சபை வரலாற்றில் தேர்தலில் போட்டியிட மனுக்கள் குவிந்தது ஒரு போதுமில்லை. கட்சியில் பொது மக்களும் தொண்டர்களும் மிக ஆர்வத் துடிப்புடன் செயல்படுகிறார்கள். அது எனக்கு "டானிக்" சாப்பிட்டது போல் புதுத் தெம்பையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது.

**அரசு அலுவலர்கள்**

வழக்கறிஞர்கள் அதிகாரிகள் பெரிய பட்டதாரிகள் எல்லாம் மனு கொடுத்திருக்கிறார்கள். அரசு வேலைகளில் இருப்பவர்கள் கூட தேர்தலில் போட்டியிட விரும்பி மனு கொடுத்திருக்கிறார்கள்.

ஆய்வுக்குழு மனுக்களை பரிசிலனை செய்து தேர்தலில் போட்டியிட அவர்களை அனுமதித்தால் தங்கள் அரசு வேலைகளைக் கூட விட்டு விடுவதற்கு தயாராக இருக்கிறார்கள்.

எனக்காக பல தொகுதிகளில் மனு கொடுத்திருக்கிறார்கள் ஆனால் நானாக எந்தத் தொகுதியிலும் போட்டியிட மனு கொடுக்கவில்லை.

அதிகபட்சமாக திருச்சி மாவட்டத்தில் 370 பேர் ஆய்வுக்குழுவிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் 340 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு உள்ளன.

இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

ஆய்வுக் குழுவில் மனு கொடுத்தவர்கள் மட்டும் தான் தேர்தலில் போட்டியிட முடியுமா? என்று நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு ஜெயலலிதா பதில் அளித்துப்பேசுகையில் தேர்தலில் போட்டியிட விருப்பம் இருந்தும் ஆய்வுக்குழுவிடம் மனு கொடுக்கும் வாய்ப்பும், சந்தர்ப்பமும், இல்லாத சூழ்நிலையில் சிலரால் மனு கொடுக்க முடியவில்லை

அப்படி மனு தாக்கல் செய்ய முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு இன்னொரு தேதி குறிப்பிட்டு தலைமைக் கழகத்தில் மனு கொடுக்க அனுமதி வழங்கப்படும் என்று கூறினார்.

(இ-உ)

### தமிழகத்திலிருந்து

கலை செய்தார். யசோதாவின் கை முறிக்கப்பட்டது.

ஜெப்பியாரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் உள்ளே தள்ள காங்கிரஸ் கட்சியால் முடியவில்லை. இது அவர்களின் கையாலாகாத தனத்தைக் காட்டுகிறது.

**போராட்டம்**

கே: இலங்கை பிரச்சினையில் ஏதும் போராட்டம் நடத்துவீர்களா?

ப: போராட்டத்தின் மூலம் மலிவான விளம்பரம் தேட நாங்கள் விரும்பவில்லை. அங்கு அமைதி ஏற்பட வேண்டும் என்று தான் மக்

# ★இன்று பெரிய வெள்ளிக்கிழமை

# பாவிகளுக்காக சிலுவையில் உயிர் நீத்த இயேசுபிரான்

-- கந்தையா நவரேந்திரன் --

இன்று பெரிய வெள்ளிக்கிழமை. தீயவரால் இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட தினம் இன்று. எமது பாவங்களுக்காக இயேசுநாதர் தனது இன்னுயிரைச் சிலுவையில் ஈர்த்த தினமே பெரிய வெள்ளிக்கிழமை ஆகும்.

சிலுவை தியாகத்தைக் குறிக்கும். அது தாங்கொண்ணா வேதனையைக் குறிக்கும். கடும் உடல் சார் துன்புறுத்தலை, சித்திரவதையை, கடும்வேதனையை, அல்லலை, துன்பத்தைக் குறிக்கும்.

ஆங்கிலத்தில் கூறும்போது சிலுவையிலறைந்தாற்போன்ற வேதனை என்றுதான் குறிக்கப்படுகின்றது. Excruciation என்ற பெயர்ச் சொல்லும், (Excruciating) என்ற பெயரடைச்சொல்லும், (Excruciate) என்ற வினைச் சொல்லும் இதனையே கூறுகின்றது.

ஒவ்வொருவரினதும் அகத்திலிருக்கும் வெறுமையையும் "தான்" என்ற அகந்தையையும் சிலுவையில் அறைவதையே சிலுவை குறிக்கும்.

இந்தச் சிலுவையில் அறைதலை நாம் ஒவ்வொருவரும் எம்முள் செய்யும்போது எங்களது ஒவ்வொருவரது மனத்திலும் இதயத்திலும் இயேசுநாதர் பிறப்பார். எம்முள் உள்ள அகந்தை, 'தான்' என்ற மையத்தைக் கொண்ட செயற்பாடுகள், பொய்மை வெறுமை ஆகியன வற்றை இயேசுநாதரின் முன்னிலையில் இறக்க வைக்கும் போதே - மரணிக்க வைக்கும்போதே எம்முள் இயேசு உயிர்த்தெழுகின்றார். இதுவே உண்மையான உயிர்த்தெழுதல் ஆகும். இதனையே "நீ மீண்டும் பிறக்காவிட்டால் சுவர்க்கத்தின் இராச்சியத்தை அடையமாட்டாய்" என்ற வரிகளால் இயேசு கூறுகிறார்.

நாம் எமது இதயங்களால் புன்னகிக்கத் தெரியாதவர்களாக - முடியாதவர்களாக இருக்கின்றோம். அயலவனை நேசிக்கத் தெரியவில்லை எங்களுக்கு

தெரிந்த அறிந்த அயலவனை நேசிக்கத் தெரியாவிட்டால் அறிவிற்கப்பாற்பட்ட இறைவனுடன் எவ்வாறு எம்மால் உறவு ஏற்படுத்த முடியுமென்பதனாலேயே இயேசு எங்களைப்பார்த்து முதலில் "அயலவனை நேசி" என்று உபதேசிக்கிறார்.

இதனைச் செய்யத்தெரியாது நாம் எம்மைக் கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் எனக் கூறிக்கொண்டு பெருமையுடன் காலந் தள்ளிக் கொண்டுபோகின்றோம்.

"Man shall not live by bread alone" என்ற இயேசுவின் எச்சரிக்கைக்குச் செவிசாய்க்காததனாலேயே இவ்வளவு துயரையும் கஷ்டத்தையும் நாம் அனுபவிக்க வேண்டியுள்ளது. எங்களது உணர்வில் சிந்தனையில் செயலில் மெய்யறிவு இருக்குமானால்; எமது கை, தலை, இதயம் ஆகியவை ஒருங்கிணைக்கப்படுமானால் இத்தகைய ஒருங்கிணைப்பிலேயே "சுவர்க்கத்தின் இராச்சியத்தை நாம் எம்முள் காணலாம்."

பொருள் உடைமையானது மனிதனுக்கு ஓரளவு மகிழ்ச்சியை அளித்தாலும், மனிதனானவன் முற்று முழுதாகப் பொருள் ஈட்டலிலேயே காலத்தை கழித்துவிடக் கூடாதே என்பதற்காகத் தான் "Man shall not live by bread alone" எனக்கூறிய இயேசுநாதர் பிறிதோரிடத்தில் "What does it profit a man if he gains the whole world and suffer the loss of his own soul" என்று இடித்துரைக்கின்றார்.

முழு உலகத்தையும் வென்றெடுத்துவிட்டு எமது ஆன்மீகத்தை இழப்பதனால் நமக்கேற்படும் இலாபம் தானென்ன?

எனவே இந்நாளில் நாம் எமது அகந்தையை வெறுமையை - பொய்மையை - தீய நினைவுகளைச் சிந்தனைகளைச் சிலுவையில் அறைந்து எமது உள்ளங்களிலெல்லாம் இயேசுநாதரை உயிர்த்தெழ வைப்போமாக (இ)

## ஜனாதிபதி அங்கீகாரம்

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 59 ஆவது திருத்தத்துக்கு ஜனாதிபதி வெங்கடராமன் கடந்த புதன் கிழமை அங்கீகாரமளித்தார்.


புதிய திருத்தம் பஞ்சாபில் அவசர காலச்சட்டத்தை அமுல்படுத்த வழி செய்கின்றது. (ஏ)


# தேர்த் திருவிழா

சங்கரத்தை

பத்திரகாளி அம்பாள்

1 - 4 - 1988



கவின்மிகு தேரில் பவனி வரும்
இந்த நன்னாளில் அடியார்களுக்கு
பத்திரகாளி அம்பாள்
அருள் புரிவாளாக.

லக்ஸ்மி ஸ்ரோர்ஸ்

துணைவிச் சந்தி :: சங்கரத்தை.

(உதயன் விநியோகத்தர், பலசரக்கு, மொத்த சில்லறை விற்பனையாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 ஆம் ஆண்டில் இருந்து

# பாதிக்கப்பட்டோருக்கான நஷ்ட ஈட்டுத் திட்டம்

## ரூபா 50 ஆயிரம் வரை அமைச்சு வழங்கும்

கொழும்பு, ஏப்ரல் 1
1983 ஆம் ஆண்டில் இருந்து வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்க புறம்பான ஒரு திட்டம் இருப்பதால் அவர்கள் இதன் கீழ் வரமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மரணமானோர்

(அ) வருமானவரிப் பிரிவு:

இறந்தவர் வருமான வரி செலுத்தி வந்த ஒருவரானால் ரூபா 50 ஆயிரம் வழங்குதல்.

விதவை அல்லது தபுதாரன் (மனைவியை இழந்தவர்) அல்லது இரத்த உறவுடையவரும் நேரே இறந்தவரில் தங்கியுள்ளவரும் இதனைப் பெறமுடியும்.

(ஆ) மத்திய (இடைப்பட்ட) பிரிவு:

மத்திய வருமானம் பெற்ற பிரிவின் கீழ் வருவோருக்கு மேலே (அ) இல் கூறப்பட்டபடியான உரிமைக்காரர்களுக்கு ஆகக் கூடியதாக ரூபா 33,000 வழங்குதல்

(இ) குறைந்த (கீழ்மட்ட) பிரிவு:

குறைந்த வருமானம் பெற்று வந்த பிரிவில் அடங்கும் உரிமைக்காரர்களுக்கு ஆக கூடுதல் தொகை ரூபா 25,000 வழங்குதல்.

(ஈ) இறந்தவரின் தப்பி உள்ள இருபத்தொரு வயதுக்குக் கீழ் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா ரூபா ஐயாயிரம் ஆகக்கூடியது நாலு பிள்ளைகளுக்கு வழங்குதல்

**காயப்பட்டோர் உடல் உறுப்புப் பாதிக்கப்பட்டோர்**

(அ) உடலுறுப்புப் பாதிக்கப்பட்டவர், குடும்பத்தின் தலைவராக அல்லது ஜீவனோபாயத்துக்கு உழைத்துக் குடும்பப்பாரத்தைச் சுமந்து கொண்டவராக இருக்குமிடத்து ஆகக்கூடிய தொகையாக ரூபா இருபத்தையாயிரம் வழங்கப்படும்.

இதற்கு அரசாங்க வைத்திய அதிகாரியின் அத்தாட்சிப் பத்திரத்தில் ஒருவரின் உழைக்கும்-தொழில்செய்யும்- சக்தியின் இழப்பு வீதம் குறிக்கப்பட வேண்டும்.

(ஆ) பாதிக்கப்பட்டவர் குடும்பத் தலைவராக இராமலும் பாதிக்சப்பட்டவர் மீது எவரும் தங்கி இராதவிடத்தும், திருமணம் செய்யாத வயது வந்த பிள்ளைக்கு ஆகக் கூடுதலாக ரூபா பதினையாயிரம் வழங்குதல்.

(இ) பாதிக்கப்பட்ட பராயம் அடையாத பிள்ளைக்கு ரூபா பத்தாயிரம் வழங்குதல்.

விண்ணப்பதாரர், நஷ்டஈடு கோரி விண்ணப்பத்தை, செயலாளர், புனருத்தாரண அமைச்சு, தபால்பெட்டி இல 2210, கொழும்பு என்று விலாசம் இட்டு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் மூலச் சான்றிதழ்களின் பிரதி மட்டுமே அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப் பிரதி கிடைத்தவுடன் அமைச்சு, நஷ்டஈட்டுத் தொகை பெறுவதற்கான பத்திரங்கள் அனுப்பி வைக்கும்.

அனுப்பவேண்டிய பிரதிகள் மரணமானோர் சம்பந்தமான நஷ்ட ஈட்டுக்குப் பின்வருவனவற்றுள் ஒன்றையேனும் அனுப்பலாம்.

(அ) இறப்புச் சான்றிதழ்
(ஆ) பொலீஸ் முறைப்பாடு
(இ) உதவி அரச அதிபரின் சான்றிதழ்
(ஈ) வேறுஆதாரங்கள் நிரூபணங்கள்.

**உடலுறுப்புபாதிப்புக்கு நஷ்டஈடு**

(அ) அரசாங்க வைத்திய அதிகாரியின் சான்றிதழ்
(ஆ) பாதிக்கப்பட்டவர் செய்து வந்த தொழில் பற்றிய சான்றிதழ்
(இ) பாதிக்கப்பட்டவர் பாதிக்கப்படமுன் நாளாந்தம் அல்லது மாதாந்தம் தொழிலால் பெற்ற வருமானம் பற்றிய சான்றிதழ்

அமைச்சு இவ்வலுவல்களைக் கவனிக்க தனிப்பட்ட எந்த ஒரு ஏஜென்டை அல்லது அரசாங்கச் சார்பற்ற பொது ஸ்தாபனத்தையோ நியமிக்கவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## அரிய வாய்ப்பு

உயர் கல்வி பெறுவதில் — சந்தர்ப்பமின்றி— வாய்ப்பின்றி இருக்கின்றீர்களா?
இதோ அரிய வாய்ப்பு

Nursing Training (தாதிகள் பயிற்சி)
Pharmacist பயிற்சி
C.I.M A.
A.A.T. (தமிழ் மூலம்)

ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படும் — உடன் வேலைவாய்ப்பு — O/L படித்தவர்கள் அனைவரும் சேரலாம்

2 - 4 - 88 சனிக்கிழமை வரை நேரில் வருபவர்களுக்கு மட்டும் விண்ணப்பப்பத்திரம் வழங்கப்படும்

**N-A-T-C**

(எலற் கல்வி நிலையம் அருகாமையில்)

(சுதுமலைச் சந்திக்கும் மானிப்பாய் அந்தோனியார் கோவிலுக்கும் இடையில்)
யாழ்ப்பாணம் வீதி,
மானிப்பாய். (2266)



## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா:

### உடனடி வேலை வாய்ப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | ஓட்டோ மெக்கானிக் | 700 — 800 SR |
| 2. | கனரக வாகன செலுத்துநர்கள் | — 550 — 700 SR |
| 3. | லுப்பி (B) றிகேஷன் வல்லுநர் | — 700 — 800 SR |
| 4. | கனரக ஈகுவிப்மன்ட் மெக்கானிக் | — 700 = 800 SR |
| 5. | மோட்டார் மின்சுருள் சுற்றும் வல்லுநர் | — 700 — 800 SR |
| 6. | ஓட்டோ ஏ/சி வல்லுநர் | — 800 — 900 SR |
| 7. | வீல் பலன்ஸ் ஏலாயன் வல்லுநர் | — 800 — 900 SR |
| 8. | பொடி திருத்தும் வல்லுநர் (ரிங்கர்) | — 700 — 900 SR |
| 9. | பெயின்டர்ஸ் | — 550 — 700 SR |
| 10. | அப்கோல்ஸ்டரி/கண்ணடி வல்லுநர் (வாகன முகடு செய்யுநர்) | — 600 — 850 SR |
| 11. | டியூன் அப் வல்லுநர் (காபறேட்டர்) | — 700 — 800 SR |
| 12. | இலிகிதர் | — 500 — 700 SR |
| 13. | குழாய் பொருத்துநர் | — 500 — 700 SR |
| 14 | Welder | — 550 — 700 SR |
| 15. | லேத் மெஷின் டெக்னீசியன் | — 600 — 750 SR |
| 16. | தச்சன்மார் | — 600 — 750 SR |
| 17. | மேசன்மார் | — 600 — 750 SR |
| 18. | இயந்திரவியல் என்ஜினியர் | — 1800 — 2250 SR |
| 19. | இலத்திரனியல் என்ஜினியர் | — 2000 — 2500 SR |
| 20. | மின்னியல் | — 2000 — 2500 SR |
| 21. | மின்பட வரைஞர் | — 1000 — 1500 SR |
| 22. | மின்னியலாளர் | — 600 — 800 SR |
| 23. | A/C தொழில்நுட்பவியலாளர் | — 750 — 900 SR |
| 24. | காரியதரிசி/தட்டெழுத்தாளர் | — 700 — 850 SR |
| 25. | டெலெக்ஸ் ஒப்பரேற்றர்கள் | — 650 — 800 SR |
| 26. | ஏயர் போட் கிளீனர்ஸ் | — 350 + 100 ஒப்பந்தம் 3 வருடம். |
| 27. | ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் | — 350 + 100 ஒப்பந்தம் 3 வருடம் |

★ குவைத்

| | | |
|---|---|---|
| 1. | ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் | — சம்பளம் 35 KD ஒப்பந்தம் 2 வருடம் |
| 2. | கவுஸ் மேட் | — சம்பளம் 30 KD ஒப்பந்தம் 2 வருடம் |

முக்கிய குறிப்பு:-

இவர்கள் யாவரும் 3-4-88 இல் எமது கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிக்க வேண்டும். அதற்முன் எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது, செய்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நிலையம் திறந்திருக்கும்.

தொடர்பு:-

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.


## வர்த்தகர் நித்திரையில் கொலை

கொழும்பு, ஏப்ரல் 1
யு. என். பி. பிரமுகரான பிரபல வர்த்தகர் ஒருவர் நித்திரையில் வைத்து இனந்தெரியாத வர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் சியபலன்துவ என்ற இடத்தில் இடம் பெற்றது.

உயிரிழந்தவரின் பெயல குருகுல ஆராச்சிகே விமர்சேன சுடப்பட்ட சமயம் அவர் வீட்டு விருந்தையில் நித்திரையில் இருந்தார். (ஒ-எ)

## தாலிக்கொடி அறுத்தாராம்

சாவகச்சேரி, ஏப்ரல் 1
அர்ச்சகர் ஒருவரின் மனைவியின் தாலிக்கொடியை அறுத்த நபர் இந்திய அமைதிப் படை முகாமில் ஒப்படைக்கப்பட்டார்.

இச்சம்பவம் கைதடி [illegible] இடம் பெற்றது. (இ-31)



மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்

## ஜொலி - சென்றலைட்ஸ் அணிகளின் மோதல் இன்று

யாழ்ப்பாணம், ஏப் 1
யாழ் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று இடம் பெறும்.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இந்த சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டி இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இப் போட்டி நடைபெறும்

மேற்படி போட்டியுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள விளையாட்டுக்கழக அணிகளுக் கிடையேயான ரிக்கெட் பருவ காலம் ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது. (க)


## அன்பின் அழைப்பு

ஏப்ரல் 1ஆம், 2ஆம் திகதிகளில்
ஆனைக்கோட்டை கூளாவடி
புதுவாழ்வு நிலையத்தில்
தினசரி காலை 9-00 மணி முதல்

**மரணம் - மகிமை - மீட்பு**

எனும் பொருளில் சிலுவைத் தியானம் நடைபெறும் - யேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களையும் - ஏற்றுக்கொள்ள விரும்புபவர்களையும் - அன்புடனும் உரிமையுடனும் அழைக்கிறோம்.

—புதுவாழ்வு நிலையத்தார்


## ஓராண்டுநினைவஞ்சலி



ஆண்டவன்அடியில்
3-7 1962
கொடியவன்
கைகளில்
1-4-1987

### இராசரத்தினம் செல்வகுமார் (பபி)

வண்ணப் பூவொன்று வாடியதால்
எம் வசந்தகால வழ்வு
இங்கே கறைபடிந்த சின்னமாச்சு
ஈழ ஒளி விளக்கின் இணையருத் தீபமடா
இருண்ட எம்மவர்க்கு
வாழ்வு தரப் புறப்பட்டாய்
முத்திரையைப் பதிப்பதற்கு
சித்திரையைத் தேர்ந்தெடுத்தாய்
முத்தான வாழ்வு மங்கே
ஏப்பிரல் பூல் ஆச்சுதடா!

உன்பிரிவால் நித்தமும் வாடும் அப்பா, அம்மா, சகோதரர்கள் உன் இணை பிரியாத நண்பர்கள்.

சோடாக்கொம்பனி லேன்
மல்லாகம்
[2261]

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர். மு. சி. கனகரத்தினம்.

தோற்றம்: 21-3-1904 மறைவு: 25-03-1986

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

13/3, நாயன்மார் வீதி,
யாழ்ப்பாணம். (2716)

## சாரணர் எதையும் எதிர் கொள்ளத் தயாராகவேண்டும்

யாழ்ப்பாணம், ஏப். 1
சாரணர்கள் எதையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறு செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பேடன் பவல் விழாவிற்கு பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. வி. அரியநாயகம் குறிப்பிட்டார்.

மேற்படி விழா அண்மையில் சாரண குழுத் தலைவர் திரு. அமரேசன் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர், உபஅதிபர் ஆகியோர் விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (இ-க)


## Aeronautical Engineering

4 வருட பயிற்சி நெறி

தகைமைகள்:-
1. G.C.E. O/L For Studentship.
2. G.C.E. (A/L) with maths and science for section A.

விபரங்களுக்கு:
சென் மேரிஸ் இன்ஸ்ரிரியூட்,
[மனோகரா தியேட்டர் அருகில்]
153, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[2718]


## திருமதி. நா நாகரத்தினம் (வண்ணார்பண்ணை)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 18 4-1921 மறைவு 3-3-1988

அன்பின் திருவுருவாய்
அனைவர்க்கும் ஆதரவாய்
பண்பின் இருப்பிடமாய்
பாங்கான தலைவியுமாய்
நேசக்கரங்களினால் நேர்வழியில்
நடத்தியெமை
ஈசன் வழி சென்ற
எமதருமைத் தாயாரே
இல்லமும் காலையும்
இரு கண்ணென மதித்து

கண்டிப்புடனும் அவற்றைக்
கண்ணியமாய் நிர்வகித்து
நோயற்ற காலத்தும்
தேயாத சுறுசுறுப்பால் சீராக
வாழ்ந்தே செழுமைபல
வழுமி நின்று
நிறைவான வாழ்வு பெற்று
இறைவன் பதம் ஏகிய உன்
திறமான தாபரிப்பை இனி
என்று காண் போமோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது அந்தியேட்டி, வீட்டுக்கிரியைகள் இன்று (1-4-88) வெள்ளிக்கிழமை பகல் 10-00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

குடும்பத்தினர்
31, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
[2712]

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
5 - 10 - 1969
மறைவு
21 - 2 - 1988

### செல்வி க. விமலநாயகி

உன் அன்பான புன்சிரிப்பாலும் அன்பான பேச்சாலும் பணிவான நடத்தையாலும் எம் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே! விமலா எங்கு சென்றாய்? காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பாய் என நினைத்தோம். காலன் உன்னை இளம் வயதினில் பறித்தானே! நீ சென்றாலும் நீ விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது. உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
உன்பிரிவால் வாடும்
உன் அன்பு அண்ணா கோணேஷ், ஐயா, அம்மா, சகோதரர்கள், அண்ணி மற்றும் உன் செல்ல அண்ணா விமலன், உன் செல்லத் தங்கை பவளம், உன் அன்பு அக்கா லேவி, உன் ஆசை மருமகன் வசி.

கோணேஸ் கல்வி நிலையம்
வள்ளியம்மன் கோவிலடி,
சுழிபுரம். (2249)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயசங்கற்பம்

காலத்தை எதிர்பார்த்து இருங்கள். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை.

— இங்கிலாந்துப் பழமொழி.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:-293/8 நாவலர் வீதி, தொலைபேசி 24305
யாழ்ப்பாணம். 23078
01.04.1988 தொ.இல: 33


## மனமில்லாத முடிவா ?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகளை விடுதலை செய்வதென ஸ்ரீலங்கா அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அப்பாடா! பெரிய காரியமும் பெரிய சாதனையும் தான்!!

கடந்த வருடம் ஜூலை மாதம் 29ஆம் திகதி கைச்சாத்தான இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ் அரசியற் கைதிகளை உடனடியாகவே விடுவித்திருக்க வேண்டும். பிரஸ்தாப ஒப்பந்தத்தின் 2-11 ஆவது சரத்து அதனை மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் செய்திருக்க வேண்டிய காரியத்தை இப்போதுதான் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

அதுவும் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஒரு விடயமாக எடுக்கப்பட்டு, ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, ஒப்பந்தத்துக்கு அப்பாற்பட்ட ஒரு விடயம் போலவே கருதப்பட்டு, தான் தனித்து ஒரு முடிவு எடுப்பது போல ஸ்ரீலங்கா அரசு நிதானம் எடுத்திருக்கிறது!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும், ஒப்பந்த அமுலையும் அரசாங்கம் எந்த விதத்தில் அணுகுகிறது என்பதை இதிலிருந்து எவரும் ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

கிழக்கிலங்கை வாழ் சிங்கள மக்களுக்கு, ஸ்ரீலங்காப் படைகளே பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதில் காட்டிய அக்கறையில், நூற்றில் ஒரு பகுதியைத் தானும் ஒப்பந்தப் பிரகாரம் தாம் செய்யக் கடமைப்பட்ட காரியங்களைச் செய்வதில் ஸ்ரீலங்கா அரசாங்கம் காட்டவில்லை!!

ஈழத் தமிழ் அரசியற் கைதிகள் விவகாரம் உலகப் பிரசித்தமானது. சர்வதேச மன்னிப்புச் சபை, அடிப்படை உரிமைகள் ஸ்தாபனம் ஆகிய சர்வதேச ஸ்தாபனங்களால் உரிய முறையில் அம்பலப்படுத்தப்பட்ட விடயம்.

எனினும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற ஒரு கேடயத்தைப் பிடித்துக்கொண்டு ஸ்ரீலங்கா அரசு உலகஅபிப்பிராயத்தைத்தட்டி விசிக் கொண்டிருந்தது.

தங்களுக்கு இழைக்கப்படும் அநீதி களையப்பட வேண்டும் என்றும், ஒன்றில் வழக்குத் தொடர வேண்டும் இல்லையேல் விடுவிக்க வேண்டும் என்றும் கோரி தமிழ் அரசியற் கைதிகள் ஆண்டுகள் பலவாக அடிக்கடி நடத்திய அஹிம்சைப் போராட்டங்களுக்குக் கூட இந்த அரசு அசையவில்லை.

பல சந்தர்ப்பங்களில் அரசியற் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டங்களைப் பலவந்தமாக முடிப்பித்த திறமையும் இந்த அரசுக்கு உண்டு!

ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்பது மாதங்களான பின்னர் எடுக்கப்பட்ட முடிவும் பார்த்துச் செய்யலாம் பாணியில் — பாகதினில் — தான் உண்டு!

அதாவது தமிழ் அரசியல் கைதிகளைப் பகுதி பகுதியாகத்தான் விடுதலை செய்யப் போகிறார்களாம். முதலில் 10பேரைவிடுவித்து விட்டு, சோடிக்கப்பட்ட ஒரு காரணத்தைக் காட்டி, அரசியற் கைதிகள் விடுதலையை இடைநிறுத்த இடமளிக்கப்பட்டுத் தான் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. மனமில்லாமல் செய்த முடிவு என்பது தெளிவாகிறதல்லவா?

எனவே தமிழ் அரசியற் கைதிகளுக்கு ஒப்பந்தப் பிரகாரம் மன்னிப்பு அளித்து எல்லோரையும் ஒன்றாகவே விடுதலை செய்யவேண்டும். ஒன்றைச் செய்தாலும் அதனை நன்றாகச் செய்யவேண்டாமா?

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தளும்பல் தீர்மானத்தைக்கேட்டு, சிறையில் வாடும் எமது சகோதரர்கள் தமது அஹிம்சைப் போராட்டத்தைக் கைவிட்டுவிடக்கூடாது. முன்னர் பல தடவைகள் ஏமாற்றப்பட்டது போல, இம்முறையும் ஏமாந்துவிடக்கூடாது. தமது நோக்கத்தை அடையும் மன உறுதியைத் தளரவிடல் ஆகாது.



### பொய்யாமொழி

**குறள்:**

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

**பொருள்:**

ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது கொடுக்கும்.

# காஸா, மேற்குக்கரைப்பகுதியில் மனித உரிமை மீறல் சம்பவம்

## சர்வதேச மன்னிப்புச்சபை இஸ்ரவேலிடம் கவலை

லண்டன், மார்ச் 31

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்று சர்வதேச மன்னிப்புச் சபை, இஸ்ரவேல் அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டுள்ளது.

பலஸ்தீனிய மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்செயல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை கவலை கொண்டு உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதனிடையில், இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸா மலைச்சரிவிலும் பலஸ்தீனியர் 'நிலநாள்' தினத்தை கடந்த புதன் கிழமை அனுஷ்டித்தனர்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரவேல் நடத்திய ஆக்கிரமிப்பை நினைவு படுத்துமுகமாக நிலநாள் அனுஷ்டிக்கப்பட்டது.

இதை ஒட்டி அப்பகுதிகளை இஸ்ரவேல் இராணுவம் சீல் வைத்து மூடியது.

இருந்தும் பலஸ்தீனியர் தொடர்ந்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர் என்று செய்திகள் தெரிவித்தன.

கலவரத்தில் ஐம்பது வயதுப் பெண் ஒருத்தி உட்பட இரண்டு பலஸ்தீனியர் இஸ்ரவேல் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அரசு செய்தி ஏஜென்ஸி ஒன்றையும் இஸ்ரவேல் அரசு ஆறுமாதங்களுக்கு மூடிவிட்டது. (எ)

### 1987இல்

## பத்திரிகையாளர்கள் உலகில் பட்டபாடு!

நியூயோர்க், மார்ச் 31

1987இல் உலகில் 26 பத்திரிகையாளர் கொல்லப்பட்டனர். இவர்களில் இருபதுபேர் விரோத சக்திகளினால் திட்டமிட்ட ரீதியில் கொல்லப்பட்டனர்.

185 பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டனர் அல்லது கடத்திச் செல்லப்பட்டனர்.

பதினொரு பத்திரிகையாளர் பயமுறுத்தல் காரணமாகச் சொந்த நாடுகளை விட்டே வெளியேறினர்.

32 பத்திரிகையாளர்கள் வெளிநாடுகளில் பணிபுரிந்த சமயம் அந்த நாட்டு அரசுகளினால் வெளியேற்றப்பட்டனர்.

பதின்மூன்று நாடுகளில் பத்திரிகையாளர்களின் நிலை குறித்து, பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் கமிட்டி தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

அந்த நாடுகள் வருமாறு:

பங்களாதேஷ், பிஜி, சிலி, பிலிப்பீன்ஸ், சிங்கப்பூர், சிலி, ஹெய்ட்டி, பனாமா, பாரகுவே, கென்யா, தென் ஆபிரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன். (எ)

### வெளி உலகில்

### தமிழ்நாடு

## சட்டசபைத் தேர்தல் ஒருநாள் கூட தாமதிக்காது!

புதுடில்லி, மார்ச் 31

தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி அடைந்த பின்னர் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை நடத்த மத்திய அரசு ஒருநாள்கூட தாமதிக்காது.

உள்துறை அமைச்சர் பூட்டாசிங் செவ்வாய்க்கிழமை இந்திய லோக சபையில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

## திருமண வீட்டில் மணமகனுக்கு சூடு!

புதுடில்லி, மார்ச் 31

பஞ்சாப் மாநிலத்தில்சடந்ததிங்கட்கிழமை இரவு ஒரு மணமகன் உட்பட 16 பேர் சீக்கியத் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

திருமண வீடு ஒன்றுக்குள் புகுந்த தீவிரவாதிகள் தாறுமாறாகச் சுட்டனர்.

மணமகன் ஆறு பெண்கள் உட்பட பத்துப் பேர் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து மடிந்தனர்.

இன்னொரு இடத்தில் 6 பேர் உயிரிழந்தனர். (ஒ-எ)

# சோவியத் யூனியனில் இன உணர்வுக்கு இடமில்லை!

## மாநில தகராறில் கிரெம்ளின் உறுதி

சோவியத் யூனியனில் இன உணர்வுக்கு இடமளிப்பதில்லை என்பதில் கிரெம்ளின் தலைமைப் பீடம் உறுதியாக உள்ளது.

இரண்டு மாநிலங்களான ஆர்மனியா, அஸர்பைஜான் ஆகியவற்றுக்கு இடையேயான பிரதேச எல்லை மோதல் தீவிரமடைந்துள்ள இத்தருணத்தில் மாஸ்கோவின் உறுதி நிலை பற்றி தெரிவிக்கப்பட்டது.

ஸ்டாலின் ஆட்சிக் காலத்தில் ஆர்மினியா மாநிலத்தைச் சேர்ந்த நோவினுகரபா பகுதி அஸர்பைஜான் மாநிலத்துடன் சேர்க்கப்பட்டது.

அப்பகுதியை மீண்டும் தங்கள் மாநிலத்துடன் சேர்க்கும்படி ஆர்மனியா மக்கள் கிளர்ச்சி நடத்தி வருகின்றனர்.

அஸர்பைஜான் மாநிலத்தில் தொழில் புரியும் ஆர்மெனியர்கள் இப்பொழுது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். பிரச்சினைக்குரிய மாநிலங்களுக்கு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## எகிப்து எல்லையில் இருந்து லிபிய இராணுவம் விலகும் கடாபி அறிவிப்பு

திரிபொலி, மார்ச் 31

எகிப்து நாட்டின் எல்லையில் நிறுத்தப்பட்டிருந்த தனது அருப்புக்களை விலக்கிக்கொள்ளப் போவதாக லிபியா அறிவித்தது.

அரபு சகோதர நாட்டுடன் இனி யுத்தம்நடத்தப்போவது இல்லைஎன்று லிபியத் தலைவர் மும்மர் கடாபி அறிவித்தார்.

எகிப்தின் கொள்கைகளுக்கு அரசியல் ரீதியில் நான் எதிர்ப்பைத் தெரிவித்து வருவேன்; இராணுவரீதியில் அல்ல - இப்படி கேர்ணல் கடாபி சொன்னார்.

இஸ்ரவேலுடன் சமாதான உடன்பாடு ஒன்றை எகிப்து கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து எகிப்து லிபிய உறவு துண்டிக்கப்பட்டது. (எ)

## இரட்டைஇலைச்சின்னம்; ஜானகி அணி முறையிடும்

சென்னை, மார்ச் 31

இரட்டை இலைச் சின்னம்பற்றி தேர்தல் ஆணையாளருக்கு அ. தி. மு. க. ஜானகி அணி முறையிடும்.

ஜானகி அணியின் பொதுச் செயலாளர் திரு. ராகவானந்தம்முன் கண்டவாறு தெரிவித்தார்.

இரட்டைஇலைச் சின்னம், கட்சிக்கொடி ஆகியவற்றைக் கேட்டு ஜெயலலிதா அணி தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பித்து உள்ளது.

அதற்குச் சரியான பதிலை ஜானகி அணி தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கும் — இப்படி திரு. ராகவானந்தம் தெரிவித்தார். (எ)

## வேட்பாளர் நியமனம் கேட்டு 3,307 பேர் ஜெயலலிதா அணிக்கு விண்ணப்பம்

சென்னை, மார்ச் 31

அ தி மு க (ஜெ அணியில் வேட்பாளர் நியமனம் கேட்டு 3,307 பேர் விண்ணப்பித்து இருக்கின்றனர்.

பட்டதாரிகள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், டாக்டர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் இவர்களில் அடங்குவர்.

இத்தகவலை அ தி மு க (ஜெ) அணிப் பொதுச் செயலாளர் ஜெயலலிதா சொன்னார்.

திருச்சி மாவட்டத்தில் உள்ள 18 தொகுதிகளுக்கு 370 பேர் வேட்பாளர் நியமனமும் கோரி விண்ணப்பித்திருக்கின்றனர் என்றும் செல்வி ஜெயலலிதா சொன்னார்.

தமிழ்நாடு சட்டசபையின் மொத்த உறுப்பினர் எண்ணிகை 234 ஆகும். (எ)

## பத்திரிகைகளின் பணி இந்திய ஜனதிபதி ஆலோசனை

கோட்டயம், மார்ச் 31

நல்லபடியாக நடப்பவற்றை வாசகர்களுக்குத் தெரிவியுங்கள்; அத்துடன் தவறுகளையும் சுட்டிக் காட்டுங்கள்.

ஜனதிபதி வெங்கடராமன் பத்திரிகையாளருக்கு முன்கண்டவாறு தெரிவித்தார்.

உணர்ச்சிமயமான செய்திகளுக்கு உண்மையை பணியவைக்கக் கூடாது என்றும் ஜனதிபதி தெரிவித்தார்.

மலையாள மனோரமா நாளிதழின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் ஜனதிபதி இதனைத் தெரிவித்தார். (எ)

# காங்கேசன் வரும் அகதிகளுக்கு விசேஷ அடையாளக் கார்ட்

## ஆலோசனை மாநாட்டில் தகவல்

காங்கேசன்துறை, ஏப். 1

எதிர்வரும் ஐந்தாம் திகதி காங்கேசன்துறை முகத்தை வந்தடைய இருக்கும் சுமார் 400 இலங்கை அகதிகளுக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அடையாளகார்ட் வழங்கவிருக்கின்றனர்.

தமிழ் நாட்டில் தங்கியுள்ள கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 400 அகதிகளே 4 ஆம் திகதி காங்கேசன்துறைக்கு வருகின்றனர்.

இவர்களுக்கு அளிக்க வேண்டிய உதவிகள் குறித்து ஆராய காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில் யாழ். அரச அதிபர் திரு. எம். டஞ்சலிங்கம் தலைமையில் விசேட மாநாடு சமீபத்தில் இடம் பெற்றது.

அதிலேயே அடையாளக் கார்ட் வழங்குவது பற்றித் தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டில் இந்திய அமைதிப்படை அதிகாரிகள், இலங்கை இராணுவ அதிகாரிகள், குடிவரவு குடியகல்வுப்பகுதி அதிகாரிகள், சுங்கப் பகுதி அதிகாரிகள், சுகாதாரப்பகுதியினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு,

★ எதிர்வரும் 5 ஆம் திகதி பகல் ஒரு மணி அளவில் காங்கேசன் துறைமுகத்தை வந்தடையும் தமிழ் அகதிகள் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தங்க வைக்கப்படுவார்கள், அகதிகளைப் பராமரிக்க அமைக்கப்பட்டு வரும் கட்டட வேலைகள் முடியாது விட்டால் விசேஷ கொட்டகை அமைக்கப்படும். மறுநாள் காலை அவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

★ அகதிகளைப் [illegible] அரசாங்க அதிபர் திரு. [illegible] இராமநாதன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் வசதிக்காக விசேஷமாககுடி தண்ணீர், மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படும். சுகாதார வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

★ அகதிகள் வந்தடைந்ததும் பாணும், குளிர்பானமும் இரவுச் சோறும் வழங்க தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் முன்வந்துள்ளது.

ஐ. நா. புனர்வாழ்வு அமைப்பு பால், கோப்பைகள் அடங்கிய பார்சல் ஒன்றை அகதிகளுக்கு அன்பளிப்பாக வழங்கும். (இ-68)

## கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் எட்டுப் பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப் 1

கிளிநொச்சி மாவட்டத்தில் 1986ஆம் ஆண்டுக்கான ஜி. சி. ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் ஒரே பாடசாலையில் 8 பேர் புலமைப் பரிசில் பெறும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

மேற்படி சிறப்பினை கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம் பெற்றுள்ளது.

இதன்படி செல்வன் எம். சந்திரசேகரன் 564 [illegible] செல்வன் எம் குகராஜா 559 புள்ளிகளையும் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் கூடுதலான புள்ளிகள் என்ற வரிசையில் முறையே இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றுள்ளனர்.

இவர்களுடன் செல்விகள் ஷிருந்தினி, குணபதி, செல்வருஜி, சியாமளாதேவி, தங்கேஸ்வரி, செல்வன் பி. சந்திரகுமாரன் ஆகியோர் புலமைப் பரிசில் பெறும் தகுதியைப் பெற்றுள்ளனர். (இ-9)

### கல்லூரியைக் கட்டி எழுப்ப

## அனைத்துப் பெற்றோரும் பொருளுதவி செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம், ஏப், 1

எமது கல்லூரியை நாமே கட்டி எழுப்புவதற்கு அனைத்துப்பெற்றோர்களும் தங்களால் இயன்ற பொருளுதவி செய்ய முன் வரவேண்டும்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அபிவிருத்தி சங்க கூட்டத்தில் பேசிய சங்கத்தின் உதவிச் செயலரும், சுன்னாகம் பிரதம தபாலதிபருமாகிய திரு. இ. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "அழிந்த கட்டடங்களையும் ஆய்வு கூடங்களையும் கட்டி எழுப்புவதற்கு யாரிடமும் உதவியை எதிர்பார்க்க முடியாது

பாடசாலையின் அபிவிருத்திக்கு பணம் மட்டும் கொடுத்தால் போதாது பெற்றோரின் சரீர உதவியும் தேவை என்றார்.

கல்லூரி அதிபர் திரு. என். ஸ்ரீபுஸ்பநாதன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு. எஸ். சுந்தரேசன் ஆசிரியர்கள் திரு. வி சச்சிதானந்தன், திரு. கே. செல்லத்துரை ஆகியோரும் உரையாற்றினர்.

### சமய நிகழ்ச்சிகளில்

## கற்பூரத் திருவிழா

யாழ்ப்பாணம் ஏப் 1

நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மாள் ஆலயத்தில் கற்பூரத் திருவிழா 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் ஆறு மணி அளவில் நடைபெறும் இவ் விழாவுக்கு சகல அடியார்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## பிரசைகள்குழு இணைப்புக்குழு சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப் 1

பிரசைகள்குழுக்களின் இணைப்புக்குழுக்களின் சந்திப்பு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு முதலாம் குறுக்குத்தெரு 148ஆம்இலக்க இல்லத்தில் நடை பெற ஏற்பாடாகியுள்ளது. (இ-9)

## கலை இலக்கிய களம்

கலை இலக்கியக் களத்தின் பத்தாவது ஒன்று கூடல் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நாளை 2 ஆம் திகதி பி. ப. 3 மணி 15 நிமிடத்திற்கு நடைபெறும். (இ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
- மணிப்புரி
- பெனரஸ்
- ஜாஞ்சிபுரம்
சேலை வகைகளைப் பெற்றுக் கொள்ள
"மம்மி டடி"
இல. 100, கண்டி வீதி,
சாவகச்சேரி.

# உதயன்

01-04-1988 வெள்ளிக்கிழமை

சாவகச்சேரியில்
★ சேட்டிங் சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
★ சகல விதமான றெடிமேட் ஆடைகளுக்கும்
தலைசிறந்த நவீன ஸ்தாபனம்
"மம்மி டடி"
இல. 10?, கண்டி வீதி சாவகச்சேரி.

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரபவ வருஷம் பங்குனி மீ 22 ஆம் திகதி [4 - 4 - 1988] திங்கட்கிழமை பிற்பகல் 12-40 மணி முதல் 2-10 மணி வரையுமுள்ள கடகலக்கின சுபமுகூர்த்தத்தில்,

| எனது புத்திரன் | எனது புத்திரி |
|---|---|
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **நித்தியானந்தன்** | **சிவசாரதா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருமணம் திருவருள் நலத்தினுல் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

திருமதி ப குமாரசாமி
33, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

திரு. ப முருகேசு
(இளைப்பாறிய ஆசிரியர்)
பெரியமாவடி. சாவகச்சேரி.

## காணவில்லை

பின்வரும் பெயர்களையுடையவர்களின் அடையாள அட்டைகளும், H C 36278 இலக்கமுடைய Raleigh சைக்கிளும் 27-3-88 அன்று இரவு ஒலைத்துறையில் காணுமற் போய்விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கலைவாணி சனசமூக நிலையம், கோவில் ஒழுங்கை, நாவாந்துறையில் ஒப்படைக்கவும்.

### பெயர் விபரம்

[1] கண. தி, கிருஷ்ணன் - பண்டத்தரிப்பு சாந்தை
[2] மாணிக்கம் வேலும் மயிலும் - பல்லசுட்டி பண்டத்தரிப்பு
[3] முத்தன் பொன்னுத்துரை - அராலி சுழிபுரம்
[4] கணபதி சின்னத்துரை பலலசுட்டி பண்டத்தரிப்பு
[5] தாமோதரம்பிள்ளை, - தம்பையா சுழிபுரம் - கிழக்கு
[6] தாமோதரம் பிள்ளை - தவராசா பண்டத்தரிப்பு சில்லாலை
[7] சுப்பிரமணியம் - நாகேஸ்வரன் சுழிபுரம் காளிகோவிலடி

[2275]

## 120 ஆம் நாள் நினைவு அஞ்சலி



**இராசதுரை பஞ்சாட்சரம்**
உரிமையாளர்: அருள் முருகன் ஜுவலர்ஸ்

96/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | முல்லை வீதி, புதுக்குடியிருப்பு.

தோற்றம்: 18 11-1936 | மறைவு: 4 12 1987

எங்கள் இல்லத்தின் தெய்வமாகத் துலங்கி எங்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய் நின்று எம்மால் மறக்க முடியாதவாறு உமது பாசத்தால் எம்மைப் பிணித்து நின்ற எமது தெய்வமே எம்மை நட்டாற்றில் விட்டுச் சென்று 120 நாட்கள் கடந்து விட்டனவாயினும் உமது கனவுகள் என்றென்றும் எமது உள்ளத்தை விட்டு நீங்காது வழிகாட்டும். மதிகடலில் கலங்க விட்டாற் போல நிற்கும் எமக்கு உமது ஆத்மா என்றென்றும் கோன்றாத் துணையாய் நிற்கும் என்னும் நினைவால் வாழ்கிறோம்

என்றும் உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

உமது அன்பு
மனைவி, அருமைச் செல்வங்கள்,
அன்பு மருமகன்.

கற்குளி.
சாவகச்சேரி

[2724]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**அமய ஆய்வு கூடக் கவனிப்பாளர் பதவி (தாழ்தரம்)**

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து அமய ஆய்வு கூடக் கவனிப்பாளர் பதவி (தாழ்தரம்)க்கான விண்ணப்பங்கள் 1988 ஏப்ரல் 18ம் திகதி வரை ஏற்றுப் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பளம்- நாளொன்றுக்கு 28/- ரூபா.

கல்வித்தகைமை: எட்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு: ஆய்வுகூட உபகரணங்கள், செய்முறைக் கருவிகள் பொதுவாகப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் என்பன பற்றிய அறிவுடையோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது: 40 வயதிற்கு மேற்படலாகாது

தெரிவு: உளச்சார்பறிப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் யாவும் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையில் பெற கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விவரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் 23×10 ச.மீ அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## அரையாண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 29 — 02 — 1960



உதிர்வு 21 — 10 — 1987

திதி: 1 - 4 - 1988

**செ. சிவபாதம் அவர்கள்**
(சுன்னாகம் - தெற்கு தொண்டர் சுகாதார நிலைய மருத்துவக்குழு உறுப்பினர்)

ஈழத்தின் இளம் தம்பி
வேங்கையின் நடை போட்டாய்
நிலையில்லா குணத்தினுல்
மக்கள் எம்மனதில்
மலையென இடம்பிடித்தாய்
ஆனுல் இன்று வேதனைப் படுகின்றோம்
வேறு என்ன செய்வது?


சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
தந்தை, சகோதரர்கள்,
மைத்துனர்மார், மருமக்கள்,
உறவினர்கள்

(2283)

## ஆறு மாத நினைவஞ்சலி 1-4 88

கோண்டாவிலில்
அகால மரணமடைந்த



நா. பாலசுப்பிரமணியம் | பா. நாகேஸ்வரி
(ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட்) நீராவியடி பிறப்பிடமாகவும் | கோண்டாவில் பிறப்பிடமாகவும்

தோற்றம்: 12-5-1929 தோற்றம்:16-7-1940

மறைவு: 16 10-1987 மறைவு:16 10-1987

கண்ணிலும் கருத்திலும் நிறைந்து நின்று எம்மைக் கண்ணீரில் கரையவிட்டு அகால மரணமடைந்த அருமை அண்ணாவுக்கும், அண்ணிக்கும் இன்று ஆறும் மாத நினைவஞ்சலியைச் செலுத்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்

**சகோதரர்கள்**
பாஸ்கரன்
சிவசுப்பிரமணியம்
ஜெயம்
திருமதி புவனேஸ்வரன் (பேபி)
,, சிவஞானசுந்தரம் (பபா)
,, பாலசிங்கம் (ருணி)

**மைத்துனர்கள்**
நமசிவாயகம்
குலசிங்கம்
சந்திரசிங்கம்

**பிள்ளைகள்**
பாலகுமார்
சுகுமார்
செல்வகுமார்
பாலேஸ்வரி

(2285)

## காணவில்லை

முருங்கையைச் சேர்ந்த தியோகு (குணம்) என்பவரின் மகள் ஜெயச்செல்வி [செல்வி] கடந்த 18 3-88 முதல் கட்டுவனில் உள்ள மங்களபதி என்னும் வீட்டிலிருந்து காணுமற் போய் விட்டார். இவரின் வயது 12, பொது நிறம் -4' - 6'' உயரம். கடைசியாக காணப்பட்டபோது சிவப்பு நிற சட்டை போட்டிருந்தார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள். "மங்களபதி" கட்டுவன் என்னும் விலாசத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[2279]

## 6ஆம் மாத நினைவஞ்சலி அந்தியேட்டிக் கிரிகைகள்



**கணபதிப்பிள்ளை நகுலகுமார்**
**[அப்துல்லா]**

தாயின் மடியில்: 20-7 1963

தாயக மண்ணில்: 5 10-1987

தென்பொதிகைத் தமிழ்காக்கத்
தெம்மாங்கு பாடிநின்ற
தீந்தமிழர் வேங்கையின் விறலவனே!
உன்னினியார் பதிலொருவர்
புடைசூழ மண்ணு காய்
உன்னினி உயர்நீத்தாய் கூண்டினுள்ளே
பொன்னுடலைத் தீயுண்ணப்
பொங்குமனந் தியாகப்
பொல்லாதோர் செய்கையினுல் வீழ்ந்தவனே
பன்னுதமிழ் நாடுள்ள
வரையுன்றன் பெயர் வாழும்
பாலகனே நிம்மதியாத் தூங்கிடடா!


பெற்றுர் உடன் பிறப்புக்கள்
பெற்றோர் - கணபதிப்பிள்ளை, சரஸ்வதி
சகோதரர் - ஜெயகுமார் விஜயகுமார் புவனகுமார்
சகோதரிகள்
உதயகுமாரி நளினகுமாரி
தர்ஷினி சிவாஜினி
நண்பர்கள்

கச்சாய்வீதி:
சாவகச்சேரி.

1-4-1988

[2292]

## 6ஆவது மாத நினைவு அஞ்சலி





| அமரர் | அமரர் திருமதி |
|---|---|
| திரு. நா பாலசுப்பிரமணியம் | பாலசுப்பிரமணியம் நாகேஸ்வரி |
| தோற்றம் : 12 - 08 - 1929 | தோற்றம் : 16 - 08 - 1940 |
| மறைவு : 16 - 10 - 1987 | மறைவு : 16 - 10 - 1987 |

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்மையெல்லாம் வளர்த்து வையகத்தில் நம்பிரசையாய் உலாவவிட்ட எம் தாய், தந்தையே! என்றென்றும் எம் வாழ்வின் ஒளி விளக்காய் இருந்து இறைவனடி சேர்ந்து விட்ட உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்டுகின்றோம். எங்கள் உடல் நீங்கும் வரை உங்கள் நினைவு எம் உள்ளத்தை விட்டு அகலாது.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

[2284]

### அமைதிப்படை.,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரியா ஊராக இந்தியப் படை சென்றபோது, அங்கு சகல போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டன இந்திய அமைதிப் படையின் 96 வாகனங்களும் செல்லும்வரை போககுவரத்து நிறுத்தப்பட்டது.

நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க வேண்டும். எமது மூளையைப் பாவித்தே தனைச் செய்ய வேண்டும்.

இப்படி அமைச்சர் சொன்னுர். (ஒ-எ)

### கல்முனையில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சூறையாடப்பட்டன.

இந்திய அமைதிப் படையினர் தாக்குதல் நடந்த இடங்களுக்கு வரவில்லை என்று முறைப்பாடுகள் வந்திருப்பதாக ஒரு ஏஜன்சிச் செய்தி தெரிவித்தது.

தாக்குதல் செய்தி கிடைத்த பதினைந்து நிமிடங்களினுள் இந்திய அமைதிப் படையினர் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கு விரைந்து சென்றனர்.

உடனடியாக தாக்குதலுக்குள்ளான மக்களைக் காப்பாற்றும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர் என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது

இச்செய்தி எழுதப்படும் வரை தாக்குதலைப் புரிந்தவர்கள் யார் என்பது இனம் காணப்படவில்லை என்றே பலதகவல்களும் தெரிவித்தன.

இதேவேளை கல்முனையில் உருவாகிய பதற்ற நிலைமை பற்றி இந்திய அமைதிப்படையின் துணைத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ. எஸ். கலகத் நேற்று ஜனதிபதி ஜெயவர்த்தனவுடன் பேச்சுக்கள் நடத்தனுர் என அறிவிக்கப்பட்டது.

நேற்று மாலையில் கல்முனையில் பொலீஸ் ஜீப் மீதும் சுடப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது.

அதேவேளை காரைதீவில் காரில் வந்தமூன்று பேர் கத்திக்குத்துக்குள்ளானுர்கள் என்றும் கார் ஒன்று எரிக்கப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டது. (அ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 01-04-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications Navalar Road, Jaffna on Friday 1st April 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org